மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் 1982-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.3/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 18-2-1982 தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.57 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

100. தமிழ்நாடு 1963—ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு கூட்டுறவுத் துறையின் 10-12-1981—ஆம் தேதியிடப்பெற்ற 932-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961—ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 119 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்

27. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ்செய்பவர்கள், சட்ட விரோதமக கப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982)